தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உழவர் பயிற்சி நிலைய கிராமப்புற பயிற்சிக் கூட்டம்**

First Published : 01 Mar 2010 12:35:29 AM IST

உதகை பிப் 28 நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத்துறையின் உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் கிராமப்புற பயிற்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

குன்னூர் தாலுகாவிற்குட்பட்ட உபதலை, தாம்பட்டி மற்றும் உதகை தாலுகாவிற்குட்பட்ட கெந்தொரை ஆகிய பகுதிகளில் கடந்த வாரத்தில் 6 நாட்கள் நடைபெற்ற இந்த கிராமப்பயிற்சிக் கூட்டங்களில் 75 விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்த கிராமப்புற பயிற்சியில் கொய்மலர் சாகுபடி குறித்த பயிற்சியும், திட்டப்பணிகள் மற்றும் மானியம் குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டது. மேலும் தேயிலை சாகுபடி, உரமிடல், பயிர் பாதுகாப்பு, தேயிலை பறித்தல், கவாத்து செய்தல் குறித்த பயிற்சிகளும், மண் பரிசோதனை, மண்புழு உரம் தயாரித்தல், காய்கறி சாகுபடி குறித்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டதோடு, செயல்முறை விளக்கங்களும் செய்து காண்பிக்கப்பட்டது.

இப்பயிற்சி முகாம்களில் தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.குணசேகரன், துணை வேளாண்மை அலுவலர் ஆர்.டி.ராஜன், உபாசி விஞ்ஞானிகள் சுகுணா, சிவானந்தன், தோட்டக்கலை வணிக வளாக அலுவலர் சுகந்தி ஆகியோருடன் உதவி வேளாண்மை அலுவலர்கள் பி.மோகன், பி.மூர்த்தி மற்றும் பி.சுப்பிரமணி ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சிகளில் விஞ்ஞானி சுகுணா பேசியதாவது: தேயிலை செடிகளை வறட்சியிலிருந்து காப்பாற்ற மே மாதம் வரை 1 கிலோ யூரியா மற்றும் 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து மாதம் ஒருமுறை தெளித்து வந்தால் வறட்சியிலிருந்து செடிகளை காப்பாற்றலாம். மேலும், தேயிலை தோட்டங்களில் 9 அங்குல ஆழத்தில் மேல் மண் மற்றும் 18 அங்குல ஆழத்திற்கு அடிமண் ஆகியவற்றை 10 இடங்களில் சேகரித்து மேல்மண்ணை தனியாகவும், அடி மண்ணை தனியாகவும் மண் பரிசோதனை செய்து சிபாரிசு செய்யப்படும் அளவிற்கு உரமிட்டு பயனடைய வேண்டுமென குறிப்பிட்டார்.

அதேபோல, உதகை உழவர் பயிற்சி நிலைய உதவி இயக்குநர் வி.குணசேகரன் பேசியதாவது:

நீர்போக உருளைக்கிழங்கு நடவு செய்ய ஏக்கருக்கு 6 டன் மக்கிய தொழு உரத்தை இட்டு நிலத்தை உழுது பயன்படுத்த வேண்டும். நிலத்தின் கார,அமில நிலை 4.8லிருந்து 5.4க்குள் இருக்க வேண்டும். அடி உரமாக ஏக்கருக்கு 48 கிலோ தழைச்சத்து, 96 கிலோ மணிச்சத்து, 48 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். ஏக்கருக்கு 20 கிலோ கார்போ ப்யூரான் மருந்தை நடவு செய்யும்போது இட வேண்டும். மேலும் கடுகு விதையை நடவு வரிசையில் விதைத்து கீரை வளர்ந்தவுடன் அறுவடை செய்யலாம். இதனால் நூற்புழு தாக்குதலையும் கட்டுப்படுத்த முடியும். 40 முதல் 50 கிராம் எடையுள்ள விதைக்கிழங்குகளை 50ல20 இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். விதையளவு ஏக்கருக்கு 1200 முதல் 1500 கிலோ வரையில் இருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

**பயறு வகைப் பயிர்களில் முழு உற்பத்தித் திறன்**

First Published : 01 Mar 2010 05:06:25 AM IST

திருவாரூர், பிப். 28: பயறு வகைப் பயிர்களில் முழு அளவிலான உற்பத்தித் திறனை எட்ட விவசாயிகள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த அறிவுறுத்த வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன்.

மத்திய அரசின் நிதியுதவியோடு செயல்படும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறு வகைப் பயிர்களில் உயர் விளைச்சலுக்கான தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து, மாநில அளவிலான பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம் திருவாரூரில் நடைபெற்றது.

முகாமைத் தொடக்கி வைத்து, மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் பேசியது:

தமிழகத்தில் பயறு வகைப் பயிர்கள் ஏறத்தாழ 5.25 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 2 லட்சம் டன் பயறு வகை தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாட்டில் பயறு வகைப் பயிர்களில் மகசூல் ஒரு ஹெக்டேருக்கு 623 கிலோவாக உள்ளது. ஆனால், தமிழகத்தில் முழு உற்பத்தித் திறனைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்குக் காரணம், வளமற்ற நிலங்களில் சாகுபடி செய்தல், சரியான அளவில் பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்காதது மற்றும் களைகளைக் கட்டுப்படுத்தாமை தான் காரணங்களாகும்.

எனவே, விவசாயிகள் உரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதலின் அவசியத்தை அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். மேலும், உர நிர்வாகம், பயிர் எண்ணிக்கையைப் பராமரித்தல், இலைவழி ஊட்டச்சத்து தெளித்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை விவசாயிகளுக்கு தெரிவித்து, பயறு வகைப் பயிர்களின் மகசூலை அதிகரித்து, உற்பத்தித் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

வேளாண் இணை இயக்குநர் சொ. அன்பழகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கபிலன், வருவாய்க் கோட்டாட்சியர் ஜெயசூரியன், வட்டாட்சியர் பட்டாபிராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### விவசாயிகளுக்கு நுகர்வோர் பாதுகாப்பு பயிற்சி

First Published : 01 Mar 2010 01:18:25 AM IST

தூத்துக்குடி, பிப். 28: விவசாயிகள், வேளாண் குழுவினருக்கு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சி முகாம் தூத்துக்குடியில் நடைபெற்றது.

மத்திய அரசின் நிதியுதவியுடன், தூத்துக்குடி மாவட்ட உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, வேளாண்மை துறை மற்றும் எம்பவர் நுகர்வோர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடுவம் ஆகியவை இணைந்து மாவட்ட அளவிலான விவசாயிகள் மற்றும் கிராமப்புற வேளாண் குழுக்களுக்கான பயிற்சியை நடத்தின.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சி முகாம் தொடக்க விழாவுக்கு எம்பவர் செயல் இயக்குநர் சங்கர் தலைமை வகித்தார்.

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சண்முகையா பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார்.

பயிற்சியில், விவசாயிகளும் நுகர்வோரே, உணவு பாதுகாப்பு, விவசாயிகளுக்கு அரசு வழங்கக் கூடிய சலுகைகள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து நுகர்வோர்களையும் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

பயிற்சி நிறைவில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்களை எம்பவர் செயல் இயக்குநர் ஆ.சங்கர் வழங்கினார். வேளாண்மை அலுவலர்கள் சங்கர், பூவண்ணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

மாப்பிளையூரணி ஊராட்சித் தலைவி பார்வதி மற்றும் கூட்டாம்புளி, ராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்த 60 பேர் கலந்து கொண்டனர்.

### நூற்புழு கட்டுப்பாட்டில் புதிய அணுகுமுறை தேவை

First Published : 01 Mar 2010 05:21:22 AM IST

கோவை, பிப்.28: நூற்புழு கட்டுப்பாட்டில் புதிய வழிமுறைகளை உருவாக்குவது அவசியம் என கோவை வேளாண் பல்கலை. துணைவேந்தர் ப.முருகேசபூபதி வலியுறுத்தினார்.

கோவை வேளாண் பல்கலை.யில் வியாழக்கிழமை நடந்த நீடித்த வேளாண்மைக்கு நூற்புழுவியல் ஆராய்ச்சியில் புதிய வழிமுறைகள் குறித்த தேசியக் கருத்தரங்கில் அவர் பேசியது: உலகளவில் நூற்புழுக்கள் ஆண்டுதோறும் சராசரியாக 100 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு பயிர்களில் மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன.

இந்தியாவில் மகசூல் இழப்பு ஆண்டுக்கு ரூ.210 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. நூற்புழுக்கள் பல பயிர்களைத் தாக்கினாலும் தானியங்கள், பயறுவகை, எண்ணெய்வித்து, கரும்பு, காய்கறி, பழங்கள், மலர்கள், வாசனை திரவிய பயிர்கள் ஆகியவற்றில் அதிக சேதம் ஏற்படுத்துகின்றன.

மேலும், நூற்புழுக்கள் பயிர்களின் திசுக்களை உண்டு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதால் பயிர்கள் நலிவடைந்து பாக்டீரியா, பூசணத் தாக்குதல்களுக்கு ஆளாகின்றன. நூற்புழுக்களை பூச்சிக் கொல்லிகள் கொண்டு கட்டுப்படுத்துவது கடினம்.

இதுதவிர திறம் வாய்ந்த பல பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு, சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டதால் தடை செய்யப்பட்டுள்ளன. இதனால், நூற்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

மேலும், நூற்புழு மேலாண்மையில் மண்ணின் வெப்பத்தை அதிகரித்தல், பயிர் சுழற்சி மேற்கொள்ளுதல், வயலில் அதிகமாக நீர் தேங்குதல் போன்ற உழவியல் முறைகளை நூற்புழுக்களை அழிக்க பெரிதும் உதவும் என்றார்.

விழாவில், "நூற்புழுவியல் அடிப்படை மற்றும் செயல்பாடு' மற்றும் "தமிழ்நாடு வேளாண் பல்கலை.யில் நூற்புழுவியலின் தொடக்கம் மற்றும் வளர்ச்சி' என்ற இரு புத்தகங்களையும் விழா மலரையும் முருகேசபூபதி வெளியிட்டார்.

இந்திய நூற்புழுவியல் சங்க பொதுச்செயலர் சுதர்சன் கங்குலி பேசியது: இந்திய வேளாண் பொருளாதார வளர்ச்சி நூற்புழுக்களால் பாதிக்கும். அதே சமயத்தில் நன்மை செய்யும் நூற்புழுக்களும் மண்ணில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறது. அவை மண்ணின் நலனை பேணிக்காத்து ஊட்டச்சத்து பயிர்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகுக்கும்.

நன்மை செய்யும் நூற்புழுக்கள் வெளியிடும் சில நச்சுப் பொருள்கள் மருந்துப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன. எனவே, நூற்புழுவியல் ஆராய்ச்சியை தேசிய அளவில் மேம்படுத்துவது இன்றியமையாதது.

தற்போதுள்ள பருவநிலை மாற்றம், சூற்றுச்சூழல் மாசுக் குறைப்பு, பூச்சிக் கொல்லிகளின் எஞ்சிய நஞ்சு, அங்கக வேளாண் பொருள்களின் தேவை போன்ற சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு நூற்புழு ஆய்வில் புதிய உத்திகளைக் கையாளுதல் அவசியம் என்றார்.

வேளாண் பல்கலை.யின் பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர் எஐ.ஜோனந்தன், நூற்புழுவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் எம்.சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**காய்கறி, பழங்களின் விலையை செல்போன் மூலம் அறிய வாய்ப்பு**

First Published : 01 Mar 2010 05:12:31 AM IST

திருச்சி பிப். 28: காய்கறி, பழங்கள் மற்றும் மலர்களின் விலையை செல்போன் மூலம் இலவசமாக அறிந்து கொள்ள விண்ணப்பிக்கலாம் என்றார் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் சுப. ராமநாதன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

"தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில், தமிழகத்தில் உள்ள 13 சந்தைகளில் வியாபாரமாகும் 150 விவசாய விளைப் பொருள்களின் அன்றாட சந்தை விலை நிலவரங்கள் செல்போன் மூலம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

விலை விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயர், முகவரி, செல்போன் எண் மற்றும் ஏதாவது ஒரு பயிர், இரண்டு சந்தைகள் ஆகிய விவரங்களை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்ப வேண்டும்.

தகவல்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி, பேராசிரியர் மற்றும் தலைவர், வேலாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி- 639115 என்ற முகவரிக்கு தெரிவிக்க வேண்டும். இதையடுத்து, மூன்று நாள்களில் தேவைப்படும் பயிர் தொடர்பான இரண்டு சந்தைகளின் விலை நிலவரங்கள் இலவசமாக செல்போனுக்கு தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும்' என்றார் அவர்.

## நூற்புழு கட்டுப்பாட்டில் புதிய அணுகுமுறை தேவை

First Published : 01 Mar 2010 05:21:22 AM IST

கோவை, பிப்.28: நூற்புழு கட்டுப்பாட்டில் புதிய வழிமுறைகளை உருவாக்குவது அவசியம் என கோவை வேளாண் பல்கலை. துணைவேந்தர் ப.முருகேசபூபதி வலியுறுத்தினார்.

கோவை வேளாண் பல்கலை.யில் வியாழக்கிழமை நடந்த நீடித்த வேளாண்மைக்கு நூற்புழுவியல் ஆராய்ச்சியில் புதிய வழிமுறைகள் குறித்த தேசியக் கருத்தரங்கில் அவர் பேசியது: உலகளவில் நூற்புழுக்கள் ஆண்டுதோறும் சராசரியாக 100 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு பயிர்களில் மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன.

இந்தியாவில் மகசூல் இழப்பு ஆண்டுக்கு ரூ.210 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. நூற்புழுக்கள் பல பயிர்களைத் தாக்கினாலும் தானியங்கள், பயறுவகை, எண்ணெய்வித்து, கரும்பு, காய்கறி, பழங்கள், மலர்கள், வாசனை திரவிய பயிர்கள் ஆகியவற்றில் அதிக சேதம் ஏற்படுத்துகின்றன.

மேலும், நூற்புழுக்கள் பயிர்களின் திசுக்களை உண்டு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதால் பயிர்கள் நலிவடைந்து பாக்டீரியா, பூசணத் தாக்குதல்களுக்கு ஆளாகின்றன. நூற்புழுக்களை பூச்சிக் கொல்லிகள் கொண்டு கட்டுப்படுத்துவது கடினம்.

இதுதவிர திறம் வாய்ந்த பல பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு, சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டதால் தடை செய்யப்பட்டுள்ளன. இதனால், நூற்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

மேலும், நூற்புழு மேலாண்மையில் மண்ணின் வெப்பத்தை அதிகரித்தல், பயிர் சுழற்சி மேற்கொள்ளுதல், வயலில் அதிகமாக நீர் தேங்குதல் போன்ற உழவியல் முறைகளை நூற்புழுக்களை அழிக்க பெரிதும் உதவும் என்றார்.

விழாவில், "நூற்புழுவியல் அடிப்படை மற்றும் செயல்பாடு' மற்றும் "தமிழ்நாடு வேளாண் பல்கலை.யில் நூற்புழுவியலின் தொடக்கம் மற்றும் வளர்ச்சி' என்ற இரு புத்தகங்களையும் விழா மலரையும் முருகேசபூபதி வெளியிட்டார்.

இந்திய நூற்புழுவியல் சங்க பொதுச்செயலர் சுதர்சன் கங்குலி பேசியது: இந்திய வேளாண் பொருளாதார வளர்ச்சி நூற்புழுக்களால் பாதிக்கும். அதே சமயத்தில் நன்மை செய்யும் நூற்புழுக்களும் மண்ணில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறது. அவை மண்ணின் நலனை பேணிக்காத்து ஊட்டச்சத்து பயிர்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகுக்கும்.

நன்மை செய்யும் நூற்புழுக்கள் வெளியிடும் சில நச்சுப் பொருள்கள் மருந்துப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன. எனவே, நூற்புழுவியல் ஆராய்ச்சியை தேசிய அளவில் மேம்படுத்துவது இன்றியமையாதது.

தற்போதுள்ள பருவநிலை மாற்றம், சூற்றுச்சூழல் மாசுக் குறைப்பு, பூச்சிக் கொல்லிகளின் எஞ்சிய நஞ்சு, அங்கக வேளாண் பொருள்களின் தேவை போன்ற சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு நூற்புழு ஆய்வில் புதிய உத்திகளைக் கையாளுதல் அவசியம் என்றார்.

வேளாண் பல்கலை.யின் பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர் எஜ.ஜோனந்தன், நூற்புழுவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் எம்.சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விதை உற்பத்தி செய்து கூடுதல் வருவாய் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

First Published : 01 Mar 2010 12:37:39 AM IST

திருச்செங்கோடு, பிப் 28: தரமான விதைகளை தங்களது வயல்களிலேயே உறபத்தி செய்து கூடுதல் வருவாய் பெறுமாறு விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

கோவை விதை சான்று இணை இயக்குநர் எஸ்.பி.சுப்ரமணியம் அலமேடு கிராமத்தில் அண்மையில் நடந்த கூட்டத்தில் பேசியது:-

விதை கிராமத்திட்டம் மூலம் 50 விவசாயிகளுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஆதாரவிதை, கருவிதை மற்றும் சான்று விதை பற்றிய நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ள வேண்டும். விவசாயிகள் குழுக்களாகவோ, தனியாகவோ விதைப்பண்ணை அமைக்கலாம் என்றார் அவர்.

## உழவர் சந்தைக்கு தக்காளி, சின்னவெங்காயம் வரத்து அதிகரிப்பு

First Published : 01 Mar 2010 12:41:42 AM IST

ஈரோடு, பிப். 28: ஈரோடு சம்பத்நகர் உழவர் சந்தைக்கு தக்காளி, சின்னவெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது.

இங்கு சராசரியாக நாள்தோறும் 2,100 கிலோ தக்காளி விற்பனையாகியுள்ளது. இரு மாதங்களுக்கு முன் மழைக்காலங்களில் 5 கிலோ முதல் 750 கிலோ வரை மட்டுமே தக்காளி வரத்து இருந்தது.

தற்போது அஞ்சுரேம்பாளையம், கண்ண வேலாம்பாளையம், ஞானிபாளையம், சென்னம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து அதிக அளவில் தக்காளி வந்து கொண்டிருக்கிறது. வெளிமார்க்கெட்டைவிட 15 சதம் விலை குறைவாக உள்ளதால், தக்காளி உடனுக்குடன் விற்பனையாகிவிடுகிறது.

தற்போது தக்காளி கிலோ ரூ.3 முதல் ரூ.5 வரை விற்பனையாகிறது.

இதேபோல் சின்ன வெங்காயமும் அதிக அளவில் வருகிறது. சராசரி யாக நாள்தோறும் 1,600 கிலோ வரை வெங்காயம் விற்பனையாகிறது. ஜனவரியில் கிலோ ரூ.16-க்கு விற்பனையாகியது.

தற்போது ரூ.10 முதல் ரூ.12 வரை விற்பனையாகிறது.

ஒசூர் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் காளிபிளவர் ரூ.12 முதல் ரூ.20 வரை விற்பனையாகிறது.

கடந்த 2009 ஏப். 1-ம் தேதி முதல் 2010 பிப். 18-ம் தேதி வரை, சம்பத் நகர் உழவர் சந்தையில் மட்டும் 5 ஆயிரத்து 890 டன் காய்கறிகள், ரூ.6.81 கோடிக்கு விற்பனையாகியுள்ளன.

பெரியார் நகர் உழவர் சந்தையிலும் தக்காளி, சின்னவெங்காய வரத்து அதிகரித்துள்ளது என்று சம்பத்நகர் உழவர் சந்தை நிர்வாக அலுவலர் எல்.குழந்தைவேலு தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 74.76 அடி

First Published : 01 Mar 2010 12:29:10 AM IST

சேலம், பிப். 28: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 74.76 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,493 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 36.93 டி.எம்.சி.

தினமலர்

**உற்பத்தி அதிகரித்து சர்க்கரை விலை சரியும்: பவார் நம்பிக்கை**

மார்ச் 01,2010,00:00 IST



புதுடில்லி : "இந்த ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட இலக்கை விட, சர்க்கரை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது; இதனால் சர்க்கரை விலை குறையக் கூடும்' என்று, மத்திய அமைச்சர் சரத் பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியாவின் 60 சதவீத சர்க்கரை உற்பத்தி மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசத்தில் தான் நடக்கிறது. ஒரு ஆண்டில் சர்க்கரை உற்பத்திக் காலம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரை. ஆனால் இந்த இருமாநிலங்களிலும் கரும்புப் பிழிதல், ஏப்ரலோடு முடிந்துவிடும்.

இந்நிலையில், சமீபத்தில் உத்தரபிரதேச மாநிலம், இறக்குமதி சர்க்கரையை ஆலைகள் சுத்திகரிப்பதற்கு விதித்திருந்த தடையை நீக்கிவிட்டது. இதனால் அம்மாநிலத்தில் ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய உணவு மற்றும் வேளாண் அமைச்சர் சரத்பவார் கூறியதாவது: சர்க்கரை உற்பத்தி இந்த ஆண்டு 160 லட்சம் டன்னைத் தாண்டிவிடும். மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில் இருந்து வந்த தகவல்கள், உற்பத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. மேலும் உ.பி., மாநில அரசு தடையை நீக்கியதால், சர்க்கரையின் விலை குறையும். சர்க்கரையின் விலை கிலோ 35 ரூபாய் வரை இருக்கும். இவ்வாறு சரத்பவார் தெரிவித்தார்.

தற்போது சில்லரை வர்த்தகத்தில் சர்க்கரை கிலோ 39லிருந்து 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் கிலோ 23 ரூபாயாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய சர்க்கரை ஆலை அசோசியேஷன் தலைவர் விவேக் சரவோகி கூறுகையில், "உ.பி., மற்றும் மகாராஷ்டிராவில் சர்க்கரை உற்பத்தி சிறிதளவே அதிகரிக்கும். இது மொத்த உற்பத்தியை அதிகரிக்க உதவும்' என்றார்.

### ஆனைமலையில் நெல் அறுவடை தீவிரம் : 1,100 ஹெக்டர் சாகுபடி 'ஜோர்'

பொள்ளாச்சி : ஆனைமலை வட்டாரத்தில் ஆயிரத்து 100 ஹெக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் அறுவடை தீவிரமாக நடக்கிறது.

ஆனைமலை சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களில் குறுவை மற்றும் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அக்., மாதம் சம்பா நெல் சாகுபடி செய்து, நான்கு மாத காலத்தில் வளர்ச்சியடைந்து தற்போது அறுவடை செய்யும் பணிகள் தீவிரமாக நடக்கிறது. விவசாயிகள் ஏடிபி 45, ஏடிபி 39, பொன்னி ரக நெல் வகைகளை சாகுபடி செய்துள்ளனர். வேளாண் தொழில்நுட்ப முறைகளை கையாண்டதால் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து, நெல் சாகுபடி விவசாயிகள் கூறியதாவது: நெல் அறுவடை பணிகள் இம்மாதம் துவக்கத்தில் இருந்து நடக்கிறது. அறுவடை பணிக்கு தினக்கூலி அடிப்படையில் தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. அதனால், ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் நெல் அறுவடை செய்கின்றனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தாண்டு நெல் சாகுபடி பரப்பு குறைந்திருந்தாலும், நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. சரியான நேரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் கிடைத்ததால், எந்த பாதிப்பும் ஏற்படவில்லை' என்றனர்

வேளாண்மை உதவி இயக்குனர் உமாராணி கூறியதாவது: குறுவை நெல் சாகுபடி காலத்தில் ஆயிரத்து 200 ஹெக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. குறுவை இரண்டாம் போகத்தில் (சம்பா) ஆயிரத்து 100 ஹெக்டரில் நெல் சாகுபடி செய்துள்ளனர். ஒரு ஹெக்டரில் எட்டு முதல் ஒன்பது டன் வரையிலும் நெல் மகசூல் கிடைத்துள்ளது. நெல் துறை அறிவுரைகளை கடைபிடித்த மாதிரி நெல் வயல்களில் 10 டன் நெல் மகசூல் கிடைத்துள்ளது. ஆனைமலை ஒன்றியத்தில் வரும் சீசனில் நீர்வள நிலவள திட்டத்தில் விவசாயிகளுக்கு 110 ஹெக்டரில் மாதிரி வயல் அமைக்கப்படுகிறது. விதை, உரம் களைக்கருவிகள் வழங்கப் பட்டு நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கவிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

### மாவு பூச்சியை அழிக்க வேம்பு மருந்து தெளிப்பு

அன்னூர் : மாவுப்பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்ட 7,000 ஏக்கர் நிலத்தில், வேளாண் துறை சார்பில் இலவசமாக வேம்பு மருந்து தெளிக்கப் படுகிறது.

அன்னூர் வட்டாரத்தில் பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மல்பெரி, காய்கறி, மரவள்ளி, பூ, பருத்தி, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களில், பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. காற்று மூலம் பரவும் இப்பூச்சி குறுகிய காலத்தில் அதிக அளவில் பெருகி விட்டது. பயிரின் சாற்றை உறிஞ்சி குடித்து, தனது நச்சுத்தன்மை மூலம் பயிரை பாதிக்கிறது. இப்பூச்சியை கட்டுப்படுத்தும் முறையை வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து அறிவித்துள்ளனர். இப்பூச்சியை கட்டுப்படுத்தவும், விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வேளாண்துறை சார்பில் சிறப்பு முகாம், கடந்த வாரம் அன்னூர் வட்டாரத்தில் அல்லப்பாளையத்தில் துவங்கியது. அடுத்த கட்டமாக கஞ்சப்பள்ளி ஊராட்சியில் மருந்து

தெளிக்கும் பணி நேற்று முன் தினம் துவங்கியது. ஊராட்சி தலைவர் செல்வநாயகி மருந்து தெளிப்பு பணியை துவக்கி வைத்தார்.

வேளாண் உதவி இயக்குனர்  (பொறுப்பு) சீனிராஜ் பேசியதாவது: மாவுப்பூச்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு "அசாடிராக்டின்' மருந்தை முதல் கட்டமாக ஒரு சதவீதமும், 15 நாள் கழித்து  "புரோபென்பாஸ்' மருந்தும் தெளிக் கப்படுகிறது. பூச்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி எறிய வேண்டும்; சுழற்சி முறையில் பயிர் செய்ய வேண்டும். இத்திட்டத்தில் வேம்பு மருந்து மற்றும் "புரோபென்பாஸ்' மருந்து முழுவதும் இலவசமாக வழங் கப்படுகிறது. விவசாயிகள் இப்பணிக்கு என எந்த கட்டணமும் செலுத்த தேவையில்லை. காரே கவுண்டன்பாளையம், மசக்கவுண்டன் செட்டிபாளையம் ஊராட்சிகளிலும் மருந்து தெளிக்கும் பணி நடக்கிறது. இவ்வாறு, சீனிராஜ் பேசினார்.
பூச்சி பாதிப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்ட 7,000 ஏக்கரில் இதுவரை 4,250 ஏக்கரில் மருந்து தெளிக்கப் பட்டுள்ளது. "இப்பணியில் விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.  மாவுப்பூச்சி குறித்த சந்தேகங்கள் மற்றும் புகாருக்கு 04254-264623,  97510 16200 என்கிற எண்களில் தெரிவிக்கலாம்' என, வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

### வேளாண் காடு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிலரங்கு

மேட்டுப்பாளையம் : தொழிற்சாலை சார்ந்த வேளாண் காடுகள் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டு தொழில் நுட்பங்கள் குறித்த இரண்டு நாள் பயிலரங்கு, மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் நாளை துவங்குகிறது.
இப்பயிலரங்கை, மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்துடன் இணைந்து நடத்துகிறது. நாளை மற்றும் நாளை மறுதினமும் நடக்கும் பயிலரங்கில், தொழிற்சாலைகளுக்கு தேவையான மரங்கள், மதிப்பு கூட்டு தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

மேலும், மரக்கூழ் காகித மரங்கள் மற்றும் தீக்குச்சி மரங்களை வளர்க்கும் முறை, உரம், நீர் நிர்வாகம், மண்ணின் தன்மை, பூச்சி நோய்களை கட்டுப்படுத்துதல், மரங்களில் மதிப்பு கூட்டபட்ட பொருட்கள் தயாரிக்கும் முறை குறித்தும் விளக்கப்படுகிறது. கோவை, ஈரோடு, கரூர், நாமக்கல், வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு,  மாதிரி பண்ணை அமைப்பதற்கான திட்டங்களும் தெரிவிக்கப்படவுள்ளது. இதில், பங்கேற்க விரும்பும் விவசாயிகள், வனக்கல்லூரி முதல்வர் அல்லது திட்ட அலுவலர் பார்த்திபனை,  04254  222 010 மற்றும் 94435 05844 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.  இத்தகவலை, வனக் கல் லூரி முதல்வர் கோவிந்தராவ் தெரிவித்துள்ளார்.

### கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை எச்சரிக்கை

திண்டுக்கல்:கரும்பு பயிரிடும் விவசாயிகள் வெல்லம் காய்ச்சுவதற்கு கரும்புகளை கொடுக்கக்கூடாது என சர்க்கரை ஆலை நிர்வாகம் எச்சரித்து நோட்டீஸ் அனுப்பியுள்ளதால் விவசாயிகள் கொதிப்படைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, ஒட்டன்சத்திரம் உட்பட பல இடங்களில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இங்குள்ள விவசாயிகள் உடுமலைப்பேட்டை அமராவதி சர்க்கரை ஆலையில் பதிவு செய்து, தங்கள் கரும்புகளை விற்று வருகின்றனர்.

இந்நிலையில் கரும்பு ஆலையில் பதிவு செய்யாத விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் விளைந்த கரும்புகளை வெல்லம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்கின் றனர். இதனால் பழநி பகுதியில் பல இடங்களில் வெல்லம் தயாரிக்கும் தொழில் நடக்கிறது. இந்நிலையில் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு ஆலையில் பதிவு,பதிவு செய்யாத விவசாயிகள் தாங்கள் பயிரிடும் கரும்புகளை வெல் லம் தயாரிக்க வழங்கக் கூடாது என்று அனைத்து விவசாயிகளுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: அமராவதி கூட்டுறவு ஆலையில் கரும்புக்கு பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு வேண்டுமானால் கட்டுப்பாடு விதிக்கலாம். ஆனால் பதிவு செய்யாத விவசாயிகளுக்கும் நோட்டீஸ் அனுப்புவது கண்டிக்கதக்கது. இது குறித்து கலெக்டர் வள்ளலாரிடம் புகார் தெரிவித்துள்ளோம். சர்க்கரை ஆலை நிர்வாகம் அளித்த நோட்டீசையும் காண்பித் துள்ளோம். கலெக்டர், சர்க்கரை ஆலை நிர்வாகத்துடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார் என்றனர்.

### வெங்காய விவசாயிகளுக்கு நஷ்டம்

கெம்மநாயக்கன்பாளையம் சுற்று வட்டார பகுதிகளில் 700 ஏக்கர் பரப்பில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டது. வெங்காய செடிக்கு அதிக குளிரும், அதிக வெப்பமும் ஒத்து போகாது. பருவநிலை மாற்றத்தால் வெங்காய செடிகள் கருகி விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியது. கார்த்திகையில் நட்ட வெங்காய செடிகளை 90 நாள் விளைச்சலுக்கு பின் மாசி மாதம் அறுவடை செய்தனர். பல ஏக்கர் செடிகளை இழந்து விட்டாலும் மீதமுள்ளவற்றை ஆறுதலுக்காக அறுவடை செய்தனர். இதனால் விவசாயிகளுக்கு அதிகளவு நஷ்டம் ஏற்பட்டது.

ஒரு ஏக்கர் வெங்காய விளைச்சலுக்கு 30 ஆயிரம் செலவாகியது. அறுவடைக்கு வரும் கூலியாட்களுக்கு ஒரு நாள் கூலி 100 ரூபாய். செலவு செய்தும் அறுவடையின் போது நஷ்டம் தான் மிஞ்சுகிறது. வெளியூரில் இருந்து வரும் தரகர்கள் வெங்காயம் சிறுவெட்டாக இருந்தால் கிலோ ஐந்து ரூபாய்க்கும், பெரியவையாக இருந்தால் ஏழு ரூபாய்க்கும் குறைந்த விலை பேசி வாங்கி செல்கின்றனர்.

### விவசாய பண்ணை பயிற்சி மையம் குளித்தலை எம்.எல்.ஏ., கோரிக்கை

குளித்தலை: "குளித்தலை அருகே முதலைப்பட்டி பஞ்சாயத்தில், தோட்டக்கலை விவசாய பண்ணை பயிற்சி மையம் அமைக்க வேண்டும்,' என குளித்தலை எம்.எல்.ஏ., மாணிக்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்துக்கு அளித்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: குளித்தலை சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட முலைப்பட்டி பஞ்சாயத்தில், அரசு தோட்டக்கலை பண்ணை 1978ல் துவங்கப்பட்டு இயங்குகிறது. பண்ணையின் மொத்த பரப்பளவு 60 ஏக்கர். இவற்றுள், 10 ஏக்கர் பரப்பளவில் மட்டும் மா ஒட்டு செடிகள், நெல்லி ஒட்டு, சப்போட்டா ஒட்டு, புளி ஒட்டு, கொய்யா ஒட்டு, பலா ஒட்டு,

தேக்கு, சவுக்கு, தைலம், பப்பாளி, இச்சிப்பூ, மல்லிகைப் பூ, அரளிப் பூ ஆகிய செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, அரசு மற்றும் வனத்துறைக்கு அனுப்பப்படுகிறது.

மீதமுள்ள 50 ஏக்கர் நிலம் பராமரிப்பு இல்லாமல் முட்புதர் மண்டிக் கிடக்கிறது. முதலைப்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில், பல்வேறு பூ செடி பயிர் செய்யப்படுகிறது. பூ செடி பயிர் செய்ய தேவையான விதை, விதைக்குச்சி, விதைச்செடி வாங்குவதற்கு ராமேஸ்வரம், மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு விவசாயிகள் செல்கின்றனர்.

முதலைப்பட்டி தோட்டக்கலை பண்ணணையில், தோட்டக்கலை விவசாயிகள் பயிற்சி மையம் ஒன்று நிறுவினால், விவசாயிகளுக்கு செடி உற்பத்தி செய்வது பற்றி செயல்முறை பயிற்சியளித்து, அப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, தோட்டக்கலை விவசாய பண்ணை பயிற்சி மையம் இங்கு துவங்க வேண்டும்.இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தோட்டக்கலை தகவல் மையம் திறப்பு

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம் அருகே தென்பழஞ்சியில் தோட்டக்கலை துறை சார்பில், நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த தகவல் மையம் திறப்பு விழா நடந்தது. விவசாய சங்க தலைவர் பாண்டி திறந்து வைத்தார். உதவி பொறியாளர்கள் ராஜேந்திரன், மேகன், வேளாண் அலுவலர்கள் சலீம்ராஜ், நடராஜன், குணசேகரன், முருகேசன், கீழக்குயில்குடி நீர்வள, நிலவள தலைவர் சந்தானம், சிவராமன், உட்பட பலர் கலந்து கொண்டனர். திருப்பரங்குன்றம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன்குமார் கூறுயதாவது:

தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 63 உப வடிநிலங்களில் பாசனம் மற்றும் வேளாண் மேம்பாட்டிற்காக உலக வங்கி உதவியுடன், பல துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் முன்னோடி திட்டம் உருவாக்கப்பட்டது. திருப்பரங்குன்றம் வட்டார (தெற்காறு உபவடிநீலம்) தென்பழஞ்சி கிராமத்தில் தகவல் மையம் துவக்கப்பட்டுள்ளது. இங்கு தோட்டக்கலை, வேளாண்மை, வேளாண் பொறியியல், பொதுப்பணித்துறை, கால்நடை, மீன்வளத்துறை, வேளாண் விற்பனை, வேளாண் பல்கலை ஆகியவற்றின் அலுவலர்கள் வாரத்தில் ஒரு நாள் வருவர். திட்டம் சாரா பயனாளிகள், பொதுமக்கள், விவசாயிகளுக்கு மற்றும் பயிற்சிகள் வழங்குவர். விவசாயிகள் பங்கேற்று பலன் அடையலாம் என்றார்.

### விதை கிராம திட்டத்தின் கீழ் உற்பத்தி குறித்த பயிற்சி முகாம்

பள்ளிபாளையம்: விதை கிராம திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு விதை உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் பள்ளிபாளையத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தலைமை வகித்தார். கோவை விதை சான்று இணை இயக்குனர் சுப்ரமணியம், ஆதாரவிதை, கருவிதை மற்றும் சான்று விதைகளின் முக்கியத்துவம் பயன்பாடு ஆகியவற்றை விளக்கினார். விவசாயிகள் குழுக்களாகவோ, தனிப்பட்ட விதத்திலோ விதைப்பண்ணை அமைக்கலாம். விவசாயிகளிடையே பரிமாற்றம் செய்தும், விதை சான்று நடைமுறைகளை விளக்கியும் பேசினார். விதைப்பண்ணை மூலம் பெறப்படும் விதைகளின் இனத்தூய்மை, முளைப்புத்திறன் நன்றாக இருப்பதால், அதிக மகசூல் கிடைக்கும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. விதை கிராம திட்டத்தின் கீழ் பள்ளிபாளையம் வட்டாரத்தில் இதுவரை 600

விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில், துணை வேளாண் அலுவலர் ஞானபிரகாசம் உள்பட பலர் பங்கேற்றனர்.

### வேளாண் இயக்குனர் ஆய்வு

ராமநாதபுரம்:திருப்புல்லாணி வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் திட்டங்களை வேளாண் கூடுதல் இயக்குனர் மதுமதி ஆய்வு செய்தார். அரசு விதை சுத்திகரிப்பு நிலைய பணிகளை ஆய்வு செய்து, பேசினர். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நான்கு விவசாயிகளுக்கு பம்பு செட், அதற்கான மானியம் 40 ரூபாய்க் கான காசோலை வழங்கப்பட்டது. வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி, துணை இயக்குனர்கள் ராஜேந்திரன், சக்திமோகன் உடனிருந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் பாஸ்கரன் செய்திருந்தார்.

### ஆத்தூர் விற்பனை சங்கத்தில் ரூ.1.60 கோடிக்கு பருத்தி ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 11 ஆயிரத்து 500 பருத்தி மூட்டைகள் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை காட்டிலும் கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுகிழமை பருத்தி ஏலம் நடந்து வருகிறது. பெரம்பலூர், அரியலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி புளிவலம், துறையூர், கள்ளக்குறிச்சி, திட்டச்சேரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் விளைவிக்கப்படும் பருத்தியை விவசாயிகள் ஏலத்திற்கு கொண்டு வந்தனர். நேற்று நடந்த ஏலத்துக்கு ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 10 ஆயிரத்து 500 மூட்டை, டி.சி.ஹெச்., 800 மூட்டை, கொட்டு பருத்தி 200 மூட்டை என 11 ஆயிரத்து 500 மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன.

டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிக பட்சமாக 5,100 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,520 ரூபாய்க்கு ஏலம் போனது.ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக 3,656 ரூபாய், குறைந்த பட்சமாக 3,276 ரூபாய்க்கு ஏலம் போனது. கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,640 ரூபாயும், குறைந்த பட்சமாக 1,991 ரூபாய்க்கு ஏலம் போனது.நேற்று ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 11 ஆயிரத்து 500 பருத்தி மூட்டைகள் கொண்ட 4,025 குவிண்டால் பருத்தி ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரம் நடந்த பருத்தி ஏலத்தை காட்டிலும் 4,500 பருத்தி மூட்டைகள் அதிகம் வந்த போதிலும், கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### கொள்முதல் நிலையங்களில் தலைமைச் செயலர் ஆய்வு

கும்பகோணம்: கொள்முதல் நிலையங்களில் குளறுபடி ஏதும் நடக்கிறதா? என தஞ்சை மாவட்டம் கும்பகோணம் பகுதியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தலைமைச் செயலர் ஸ்ரீபதி நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.கும்பகோணம் வந்த தலைமை செயலர் ஸ்ரீபதி நேற்று மாலை தாராசுரம் நெல்கொள்முதல் நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு கொள்முதல் நடப்பதை பார்வையிட்டு, விவசாயிகளிடம் கொள்முதல் நிலைமை குறித்து கேட்டறிந்தார். அப்போது விவசாயிகள், ""இரண்டு நாட்களாக கொள்முதல்

செய்யப்படாமல் தாமதப்படுத்தப்படுவதாக," தெரிவித்தனர்.டி.ஆர்.ஓ., கருணாகரன், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளரிடம், ""உடனுக்குடன் கொள்முதல் செய்ய வேண்டும்.

விவசாயிகள் காத்திருக்கும் வகையில் செயல்படக்கூடாது. அங்கு சாக்கடை அருகில் நெல்மணிகள் கொட்டியிருப்பதை உடன் அகற்ற வேண்டும்," என்றார்.பின், சாக்கோட்டையில் உள்ள நெல் கொள்முதல் நிலையம் சென்று பதிவேடுகளை ஆய்வு செய்தார். கொள்முதல் செய்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மணிகளை சோதனை செய்தும், நெல்லை விற்பனை செய்ய வந்த விவசாயிகளிடம், ""சாகுபடியின் போது வேளாண் துறையினர் தங்களுக்கு ஆலோசனைகள் ஏதும் கூறினார்களா? வயல்களை நேரில் வந்து பார்வையிட்டார்களா," எனக் கேட்டார்.

அதற்கு, ""வேளாண் துறையினர் வந்து பார்வையிட்டதாக," விவசாயிகள் தெரிவித்தனர்.""நெல் விதைகள் எங்கு வாங்கினீர்கள். விளைச்சல் எப்படி உள்ளது. தற்போது வயலில் என்ன சாகுபடி செய்ய உள்ளீர்கள். பயறு சாகுபடிக்கும், நெல் சாகுபடிக்கும் என்ன வித்தியாசம் உள்ளது," என விவசாயிகளுடன் தலைமை செயலர் கலந்துரையாடினார்.பின், நாச்சியார்கோவில், திருச்சேறை ஆகிய இடங்களில் நெல்கொள்முதல் நிலையங்களை பார்வையிட்டார். குடவாசல் அருகே நுகர்பொருள் வாணிபத்தின் பொது விநியோக திட்டத்துக்கான வட்டக்கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையத்தை பார்வையிட்டார்.உணவுத்துறை செயலர் சண்முகம், டி.ஆர்.ஓ., கருணாகரன், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் பிச்சையா, தாசில்தார் போஸ், தனி தாசில்தார் முருகதாஸ், எஸ். பி., செந்தில்வேலன், டி.எஸ்.பி., இளங்கோவன் மற்றும் அதிகாரிகள் உடன் சென்றனர்.

### நெல் கொள்முதல் குறைபாடு களைய நடவடிக்கை: தொழிற்சங்கம் கோரிக்கை

தஞ்சாவூர்: ""நெல் கொள்முதல் குறைபாடுகளின்றி நடக்க ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்," என நுகர்பொருள் வாணிபக்கழக ஏ.ஐ.டி.யு.சி., தொழிற்சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திரகுமார் வேண்டுகோள் விடுத்தார்.நெல் கொள்முதலில் உள்ள சிறு, சிறு குறைபாடுகள் பெரிதுபடுத்தப்பட்டு கோடிக்கணக்கில் முறைகேடுகள் நடப்பதாக கூறப்படுகிறது. இப்பிரச்சாரங்கள் அரசு கொள்முதலுக்கு எதிரான சக்திகளுக்கு வாய்ப்பாக அமைகிறது. விவசாயிகளுக்கு எந்த லாபமும் இல்லை.

விவசாயிகளின் விளைபொருளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்ட நாள் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியே அரசு நெல் கொள்முதலாகும். அல்லது இடைத்தரகர்கள் விவசாயிகளை சூரையாடியிருப்பார்கள். எனவே, அரசு கொள்முதலை பாதுகாப்பது அவசியம். லட்சக்கணக்கான டன் நெல்லை கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டு குறுகிய காலத்தில் கொள்முதல் செய்து பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இங்கு செயல்படுகிறது. இங்குள்ள சிறு, சிறு குறைபாடுகளை களைய தொழிற்சங்கங்கள் உளப்பூர்வமாக முயற்சி மேற்கொள்கிறது. லாரிகளின் கொள்முதல் செய்யப்பட்ட நெல் இயக்கத்தில் டோக்கன் முறை வந்ததால் பாதி குறைபாடுகள் நீக்கப்பட்டது. டோக்கன் போடுவதில் வெளிப்படை தன்மை வேண்டும் என தொழிற்சங்கம் கோரி வருகிறது. இதை ஏற்றால் நெல் இயக்கம் செய்வதில் உள்ள குறைபாடுகள் முழுமையாக களையப்படும்.

நெல் கொள்முதல் அதிகமாக நடக்கும் மூன்று மாதங்களில் கொள்முதல் பணியாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், அதிகாரிகள் இரவு பகலாக சிரமப்படுகின்றனர். ஆனால், இவர்கள் மீது சிறு, சிறு புகார்களை கூறி இடைத்தரகர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். கொள்முதல் காலத்தில் தினமும் 12 மணி நேரம் வரை பணிபுரிய வேண்டிய கட்டாயம்

ஏற்படுகிறது. தரம் பரிசோதிக்க வேண்டும். லட்சக்கணக்கில் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். பல்வேறு கணக்குகள் பராமரிக்க வேண்டும். ஆனால், மிகக்குறைவான கூலியே இவர்களுக்கு வழங்கப்படுகிறது. சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நெல் தூற்றி, எடை வைத்து, தைத்து, அடுக்கி பின் லாரியில் ஏற்ற 1.50 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. தூற்றுவது இனறி எடை வைத்து, தைத்து லாரியில் ஏற்ற மூடைக்கு எட்டு ரூபாய் வீதம் தனியார் கூலி வழங்கப்படுகிறது.

இவர்கள் மீது புகார் வரும்போது மிகப்பெரிய தண்டனையாக வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். தவறு செய்கின்ற பணியாளர்களுக்கு தொழிற்சங்கம் சிறிதும் ஆதரவளிக்காது. இதில், உள்ள சிறு, சிறு குறைபாடுகளை போக்க வேண்டும். அதற்காக ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு வழங்கப்படும். நிர்வாகமும் குறைகளை களைய தொழிற்சங்கம் சார்பில் முன்வைத்துள்ள கோரிக்கைகளை முன்னுரிமை அளித்து உடன் தீர்க்க வேண்டும். நெல் கொள்முதல் நடைமுறை பிரச்னைகளை, தவறுகளை விவசாய பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், நிர்வாகம் மற்றும் அரசு பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்து வழிகாட்டு நெறிகளை வகுத்து தீர்க்க வேண்டும். இடைத்தரகர்களின் புகார்களுக்கு பெரும் தண்டனை வழங்குவதை அரசு தவிர்க்க வேண்டும், என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### நெற்பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை வட்டாரத்தில் நெற்பயிர் சுமார் 700 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் படைப்புழுக்களின் தாக்குதலை கட்டுபடுத்தும் வழிறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.தற்போது நெற்பயிர் கதிர்வெளிவரும் நிலையிலும் பூக்கும் பருவத்திலும், பால்பிடிக்கும் பருவத்திலும், அறுவடை பருவத்திலும் உள்ளது. இத்தருணத்தில் நெற்பயிரில் ஆங்காங்கே படைப்புழு தாக்குதல் காணப்படுகிறது. இதனால் வயல் முழுவதும் கடும்பாதிப்புக்குள்ளாகும். ஒரு புழு 15 நாள் முதல் 24 நாட்கள் வாழும். இப்புழுக்கள் இளம் புழு பருவத்தில் பச்சை நிறத்திலும், வளர வளர பழுப்பு நிறத்திலும் ஓரங்களில் வெளிறிய கோடுகளும் இருக்கும். சில நேரங்களில் பச்சை நிறத்திலும் காணப்படும். எனவே கீழ்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றை மாலை வேலையில் ஒரு ஏக்கருக்கு எண்டோசல்பான் 300 மிலி அல்லது குளோர்பைரிபாஸ் 500 மிலி தெளிக்க வேண்டும். இவ்வாறு புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

வேலூார்,:பேர்ணாம்பட்டு அருகே ஏரிக்குத்தி ஆரம்பப் பள்ளியில் பயிறு சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. பேர்ணாம்பட்டு உதவி வேளாண்மை இயக்குனர் பாபு ரவிவர்மன் தலைமை வகித்தார். முன்னாள் எம்.எல்.ஏ., கோவிந்தன் முகாமினை தொடங்கி வைத்தார். விதை கிராம திட்டத்தின் கீழ் துவரை, உளுந்து, பச்சைப் பயிறு, காராமணி, கொள்ளு, அவரை, மொச்சை போன்ற பயிறு வகைகள் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. 3 நாட்கள் நடந்த பயிற்சி முகாமில் 50 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். இதில் உதவி வேளாண்மை அலுவலர்கள் நவீன்குமார், பன்னீர்செல்வம், சங்கர், ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செம்மை நெல் சாகுபடி அறுவடை வயல் விழா**

குடியாத்தம் விரிஞ்சிபுரம் அடுத்த சோழமூர் கிராமத்தில் செம்மை நெல் சாகுபடி அறுவடை வயல் விழா நடந்தது. தமிழக அரசின் நீர்வள நில வள திட்டத்தின் கீழ் கவுண்டன்ய நதி உபவடிநீர் பாசன பகுதிக்கு உட்பட்ட கே.வி.குப்பம், காட்பாடி, அணைக்கட்டு ஆகிய ஒன்றியங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் செம்மை நெல் சாகுபடி 40 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இதன் அறுவடை விழாவுக்கு மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் சுரேஷ் தலைமை வகித்தார்.

உதவி பேராசிரியர் சத்தியா வரவேற்றார். சோழமூர் ஏரி பாசன சங்கத்தலைவர் சாந்த குமார் முன்னிலை வகித்தார். உதவி பேராசிரியர்கள் சுந்தரவதனா, ஷீபாஜாஸ் மின், முன்னோடி விவசாயி கோதாவரி ஆகியோர் பேசினர்.நீர்வள, நிலவள திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

விருதுநகர்:விருதுநகர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி நடந்தது. மாவட்டவழங்கல் அலுவலர் கொம்பையன் தலைமை வகித்தார். விருதுநகர் உதவி இயக்குனர் (உழவர் பயிற்சி) ராஜகோபால், வேளாண்மை அலுவலர் (விற்பனை) அய்யப்பன், சிவகாசி நுகர்வோர் பாதுகாப்பு சேவை மையத்தலைவர் எஸ். சுப்பிரமணியன் பேசினர்.பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பங்கேற்பு சான்றுகள் வழங்கப்பட்டது.

**உச்சத்தில் கரும்பு அறுவடை: வெல்லம் தயாரிப்பு தீவிரம்**

திருப்பூர் : வெல்லம் விலை வீழ்ச்சி அடைந்திருந்தாலும், கரும்பு அறுவடை உச்சத்தில் இருப்பதால், காங்கயம் பகுதியில் வெல்லம் தயாரிப்பு தீவிரமடைந்துள்ளது.

தாராபுரம், காங்கயம் பகுதிகளில் நெல், கரும்பு, மஞ்சள் போன்றவை அதிகமாக சாகுபடி செய்யப்பட்டன. அரசு தரப்பில், ஒரு டன் கரும்புக்கு 1,350 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்ட போதே, பெரும்பாலான விவசாயிகள் கரும்பு சாகுபடியை தவிர்த்து, மாற்று பயிர்களை சாகுபடி செய்யத்துவங்கினர். மத்திய அரசு, கடந்த இரண்டு மாதத்துக்கு முன், கரும்பு டன்னுக்கு 1,445 ரூபாய் விலை நிர்ணயம் செய்தது. ஆனால், தனியார் ஆலைகள் 2,300 ரூபாய் வரை விலை கொடுத்து, கரும்பை கொள்முதல் செய்தன.

அரசின் நிர்ணய விலையை எதிர்பார்க்காமல், கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள், நாட்டு சர்க்கரை தயாரிக்கும் தனியார் ஆலைகளுக்கும், வெல்லம் உற்பத்தியாளர்களுக்கும் கரும்புகளை விற்பனை செய்தனர். ஆண்டுதோறும் ஜன., - பிப்.,மாதங்களில் கரும்பு அறுவடை அதிகம் இருக்கும். திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம், காங்கயம் மற்றும் ஈரோடு மாவட்டத்தின் பல பகுதிகளில், ஆலைகளிடம் ஒப்பந்தம் செய்யாதவர்களிடம் இருந்து கரும்புகளை விலைக்கு வாங்கி, வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது.

வெல்லத்தில், அச்சு வெல்லம், உருண்டைவெல்லம் என இரண்டு வகை உள்ளது. இதில், உருண்டை வெல்லம் தயாரிக்க ஆட்கள் தேவை அதிகம்; அச்சு வெல்லம் தயாரிக்க ஆட்கள் தேவை குறைவு. இருப்பினும் சந்தைகளின் தேவை கருதி, உருண்டை வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில், இந்தாண்டு சாகுபடி செய்யப்பட்ட கரும்புகள், தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. கரும்பு அறுவடை சீசன் உச்சத்தில் இருப்பதால், காங்கயத்தில் உள்ள வடபழநி, நத்தகாடையூர், முள்ளிபுரம் போன்ற இடங்களில் வெல்லம் உற்பத்தி மும்முரமாகி உள்ளது. இதனால், இங்குள்ள ஆலைகளை கடந்து செல்லும் போது, வெல்லம் வாசனை "தூக்கலாக' உள்ளது.

வயல்வெளியை ஒட்டி அமைந்துள்ள ஆலைகளில், இயந்திரங்களை கொண்டு கரும்புகள் அரவை செய்யப்படுகின்றன. அரவை செய்து எடுக்கப்படும் கரும்புச்சாறு, பெரிய கொப்பரைகளில் கொதிக்க வைக்கப்படுகிறது. கொதிக்க வைக்கும் கரும்புச்சாறு இறுகி, சர்க்கரையாக பக்குவமடைந்ததும், மரப்பலகையில் உருவாக்கப்பட்ட பெரிய கலன்களில் கொட்டி ஆற வைக்கப்படுகிறது.

மாவு பதத்தில் இருக்கும் சர்க்கரையை உருண்டைகளாக்கும் பணியில் பெண்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். அந்த உருண்டைகளை உலர வைத்து வெல்லமாக்குகின்றனர். அதேபோல், காய்ச்சி எடுத்து மாவு பதத்தில் உள்ள சர்க்கரையை, மரத்தாலான அச்சுக்களில் ஊற்றி, அச்சு வெல்லம் தயாரிக்கின்றனர். உற்பத்தி செய்யப்படும் வெல்லங்களை விற்பனை செய்ய, ஈரோடு மாவட்டத்தில் சித்தோடு, கவுந்தப்பாடி ஆகிய இடங்களில் பிரத்யேக சந்தைகள் உள்ளன. திருப்பூர், ஈரோடு மாவட்டங்களின் பல பகுதிகளில் இருந்து வரும் வெல்லத்தை, இச்சந்தைகளில் உள்ள மொத்த வியாபாரிகள் வாங்கி, இங்குள்ள குடோன்களில் இருப்பு வைத்து, வெளி மார்க்கெட்டுகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

பொதுவாக பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வெல்லத்திற்கு கிராக்கி ஏற்பட்டு விலை அதிகரிக்கும். கடந்த ஆண்டு டிச., மாதம் உருண்டை வெல்லம் 30 கிலோ 900 ரூபாய் வரை விற்பனையானது. உள்ளூரில் பண்டிகை விற்பனை இருந்ததாலும், வெளிமாநில வியாபாரிகள் தமிழகத்திற்கு வந்து வெல்லம் கொள்முதல் செய்ததாலும் விலை குறையாமல் இருந்தது. ஜன., மாதத்தில் துவங்கிய கரும்பு அறுவடை, இப்போது உச்சத்தில் உள்ளது. அதே நேரத்தில், வெளிமாநில வியாபாரிகள் வருகை குறைந்துள்ளதால், வெல்லம் விலை குறைந்து வருகிறது. 30 கிலோ உருண்டை வெல்லம் 750 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. இருப்பினும், கரும்பு அறுவடை அதிகமாக உள்ளதால், ஆலைகளில் வெல்லம் தயாரிப்பு தீவிரமடைந்துள்ளது.

**சர்வதேச அளவில் ஒளிமயமான எதிர்காலம் இந்திய உர உற்பத்தி துறையில், அரசு கட்டுப்பாடுகள் படிப்படியாக விலகும்**

ராமகிருஷ்ண கசேல்கர்

இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு

சர்வதேச அளவில் உர உற்பத்தி துறைக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளதாக அண்மைக் கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் தாக்கம் இந்தியாவிலும் விரைவில் உணரப்படும் என்றும், உள்நாட்டு உர துறையில் மத்திய அரசின் கட்டுப்பாடுகள் படிப்படியாக நீங்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில்லரை விற்பனை

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டில் உர உற்பத்தி துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. சில்லரை விற்பனையில், உரங்களின் விலையை மத்திய அரசே நிர்ணயம் செய்து வருகிறது. உர நிறுவனங்கள் அரசு நிர்ணயம் செய்யும் விலையில் உரங்களை விவசாயிகளுக்கு வழங்குகின்றன. இதற்காக நிறுவனங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது.

இந்நிலையில் சென்ற இரண்டு ஆண்டுகளாக, உரத் துறையில் மத்திய அரசின் அணுகுமுறைகளில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இந்த மாறுதல்கள், குறுகிய கால அடிப்படையில் பயன் அளிக்காது என்றாலும், நீண்ட கால அடிப்படையில் இத்துறையின் வருவாய் மற்றும் லாப வளர்ச்சிக்கு துணை புரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உர கொள்கையில் அரசு ஏற்படுத்தி வரும் மாற்றங்களால், எதிர்காலத்தில் உர நிறுவனங்கள் அரசின் மானியத்திற்காக காத்திருக்க வேண்டிய நிலை அகலும்.

யூரியா அல்லாத உரங்கள்

மத்திய அரசு, அண்மையில் சத்து அடிப்படையிலான உர மானியக் கொள்கையையும், யூரியா அல்லாத இதர உரங்கள் விலை நிர்ணயத்தில் அதன் கட்டுப்பாட்டை தளர்த்துவதையும் அறிவித்தது. அதே சமயம் யூரியா விலையை 10 சதவீதம் உயர்த்தியுள்ளது. இது, வரும் ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது.

இனி, யூரியா அல்லாத உரங்களுக்கான மானிய அளவு நிலையாக இருக்கும். சில்லரை விற்பனையில் இந்த உரங்களின் விலையில், சர்வதேச சந்தை நிலவரத்துக்கு ஏற்ப, ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். எனினும் மத்திய அரசு, தனிப்பட்ட மானியங்கள் எதையும் அறிவிக்கவில்லை. மேலும் இத்திட்டத்தை எவ்விதம் செயல்படுத்த உள்ளது என்ற விவரத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

போட்டி அடிப்படையில்...

போட்டி அடிப்படையில் உரங்களின் விலையை நிர்ணயம் செய்வது உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு சாதகமான அம்சமாகும் இதனால், நிறுவனங்கள் அவற்றின் செயல்திறனை வெளிப்படுத்த முடியும். நிறுவனங்கள் அவற்றின் திறமைக்கேற்ப குறைந்த விலையில் மூலப் பொருள்களை கொள்முதல் செய்யும் விநியோக ஒருங்கிணைப்பு வசதிகளை பயன்படுத்தி, செயல்பாட்டு செலவினத்தை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளும். இதனால், நிறுவனங்களுக்கு அதிக நிகர லாபம் ஈட்ட வாய்ப்பு கிடைக்கும்.

புதிய உரக் கொள்கை, இத்துறையில் புதுமையான தயாரிப்புகளுக்கு சலுகை அளிக்க உத்தேசித்துள்ளது. தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்புக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கும் ஊக்கமளிக்கவும் முடிவு செய்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு தரமான உரம் கிடைக்கும்.

நிறுவனங்களுக்கிடையில் ஏற்படும் போட்டி காரணமாக, உரங்களின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யூரியா சில்லரை விலையை மத்திய அரசு 10 சதவீதம் உயர்த்தி உள்ளது. இதனால், உர தயாரிப்பு நிறுவனங்கள், மானியத்திற்காக அரசை சார்ந்திருக்கும் நிலை குறையும். சத்து அடிப்படையிலான உர மானியக் கொள்கையால், நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடுகளை மேற்கொள்ளும்.

நடப்பு நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் (அக்டோபர் –டிசம்பர்) உள்நாட்டு உர நிறுவனங்களின் நிதி நிலை முடிவுகள் மிகவும் சிறப்பாக உள்ளன. 24 நிறுவனங்களின் லாபம் ஒட்டுமொத்தத்தில், சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தை விட, 88.5 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக டாட்டா கெமிக்கல்ஸ், தீபக் ஃபெர்டிலைசர்ஸ் மற்றும் ஆரிஸ் அக்ரோ ஆகிய நிறுவனங்களின் லாபம் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

கையகப்படுத்துதல்

இந்திய உர உற்பத்தி துறையில் பல ஆண்டுகளாக, கையகப்படுத்துதல் நடவடிக்கைகள் அநேகமாக எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் சர்வதேச அளவில் இத்துறையில் இணைப்பு திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் நார்வே நாட்டைச் சேர்ந்த யாரா நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த டெரா நிறுவனத்தை வாங்கியது. உர தயாரிப்புத் துறையில் இறங்குவதால், அதிக லாபம் ஈட்ட முடியும் என்பதால்தான் நிறுவனங்கள் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கி உள்ளன.

இதே போன்று பிரேசில் நாட்டைச் சேர்ந்த சுரங்கத் துறை நிறுவனமான வேல் கார்ப்பரேஷன், அந்நாட்டில் செயல்பட்டு வரும் இரண்டு அமெரிக்க நிறுவனங்களின் உர வணிக பிரிவுகளை கையகப்படுத்தியுள்ளது. சென்ற ஜனவரி மாதத்தில், உலகின் மிகப் பெரிய சுரங்க நிறுவனமான பீ.எச்.பி. பிலிட்டன் கனடா நாட்டின் அதபாஸ்கா பொட்டாஷ் நிறுவனத்தை வாங்கியுள்ளது. கனடாவைச் சேர்ந்த அக்ரியம், போட்டி உர நிறுவனமான சி.எஃப். இண்டஸ்ட்ரீஸ்–ஐ கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இனி வரும் காலங்களில் இந்திய உரத் துறையிலும் இது போன்ற நடவடிக்கைகள் அதிகரிக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

பாதிப்பு

உரங்களின் விலை உயர்த்தப்படும் நிலையில், விவசாயிகள் உர பயன்பாட்டை குறைக்கக்கூடும் என்ற ஐயப்பாடும் உள்ளது. இடுபொருள்கள் குறையும் நிலையில், நாட்டின் வேளாண் உற்பத்தி மிகவும் பாதிப்புக்குள்ளாகும் என்ற நிலைப்பாடும் உள்ளது.

## டயர் நிறுவனங்களின் விரிவாக்கத்தால் உள்நாட்டில், இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு பன்மடங்கு உயரும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

உள்நாட்டில், அனைத்து முன்னணி டயர் நிறுவனங்களும் மிகப் பெரிய அளவில் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதனால் அடுத்த சில ஆண்டுகளில் மோட்டார் வாகனங்களுக்கான டயர்கள் தயாரிப்பில் ஓர் எழுச்சி ஏற்பட உள்ளது. எனவே டயர் தயாரிப்பில் முக்கிய மூலப்பொருளாக பயன்படும் இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடும் பன்மடங்கு உயர உள்ளது.

டிரக் – பேருந்துகள்

தற்போது டிரக்குகள் மற்றும் பேருந்துகளுக்கான டயர்களில் இயற்கை ரப்பர் பயன்பாடு 40 சதவீத அளவிற்கு உள்ளது. பொருளாதார வளர்ச்சியால், ஓரிரு ஆண்டுகளில் டிரக்குகள், பேருந்துகள் உள்ளிட்ட வர்த்தக வாகனங்களின் விற்பனையில் அமோக வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இவ்வகை வாகனங்களுக்கான டயர்கள் தயாரிப்பிலும் பெரும் உத்வேகம் ஏற்படும்.

இதனையடுத்து, இயற்கை ரப்பர் பயன்பாடும் விண்ணைத் தொடும் அளவுக்கு அதிகரிக்க உள்ளது. 2020–ஆம் ஆண்டுக்குள், உள்நாட்டில் ஆண்டுக்கு 5 லட்சம் டன் ரப்பருக்கு பற்றாக்குறை ஏற்படும் என ரப்பர் வாரியத்தின்

உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கேரள மாநிலம்

பாரம்பரியமாக ரப்பர் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும், கேரளா போன்ற இடங்களில், இயற்கை ரப்பர் சாகுபடி பரப்பளவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே ரப்பர் அளிப்பில் தட்டுப்பாடு உருவாவது தவிர்க்க இயலாதது என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

தற்போது நம் நாடு, ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் 1,870 கிலோ இயற்கை ரப்பரை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. இது, உலக அளவில் வேறு எந்த நாட்டிலுமே எட்டப்படாத அதிகபட்ச அளவு என்பது குறிப்பிடத்தக்கது.

## குன்னூர் ஏல மையத்தில் வரலாறு காணாத வகையில் 70 சதவீத தேயிலை தூள் தேக்கம் விவசாயிகள் அதிர்ச்சி

குன்னூர், மார்ச்.1–

குன்னூர் ஏல மையத்தில் வரலாறு காணாத வகையில் 70 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளதால் விவ சாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

15 லட்சத்து 96 ஆயிரம் கிலோ தேயிலை தூள்

வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை எண் 8–க்கான ஏலம் கடந்த 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 96 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 10 லட்சத்து 13 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 83 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

விலை வீழ்ச்சி

ஏலத்தில் விற்பனையை பொறுத்த வரை 2 ரூபாய் அனைத்து தேயிலை தூள் களுக்கும் விலை வீழ்ச்சி ஏற் பட்டது. இதன் காரணமாக 70 சதவீதம் தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.

தேயிலை ஏல மையத்திற்கு வந்த தேயிலை தூளின் மொத்த அளவில் 30 சதவீத தேயிலை தூள் மட்டுமே விற்பனையா னது. ஏலத்தில் உள் நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருந்தது.

சி.டி.சி. ரக தேயிலை தூள்

ஏற்றுமதியாளர்கள் ஏலத்தில் அதிகளவு கலந்து கொள்ளவில்லை. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 152 ரூபாயும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 174 ரூபாயாகவும் இருந்தது.

20 தேயிலை தொழிற் சாலைகளின் சி.டி.சி. ரக தேயிலை தூள் 100 ரூபாய்க்கு மேல் ஏலம் சென்றது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூளை பொறுத்த வரை 15 தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை தூள் 100 ரூபாய்க்கு மேல் ஏலம் சென்றது.

இலை ரகம்

தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 53 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாய் முதல் 120 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 54 ரூபாயில் இருந்து 58 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 122 ரூபாய் வரையிலும் ஏலம் சென் றது.

விற்பனை எண் 9–க்கான ஏலம்

விற்பனை எண் 9–க்கான ஏலம் வருகிற 4, 5 ஆகிய தேதி களில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 13 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது. கடந்த சில மாதங்களாக தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்து விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

விற்பனை எண் 8–க்கான ஏலத்தில் வரலாறு காணாத வகையில் 70 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது சிறு விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தேயிலை தூளின் விலை வீழ்ச்சியை தடுக்க அரசு என்ன செய்ய போகிறது என்ற கேள்வி தேயிலை உற்பத்தியாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.